### இயற்கை உரம் தயாரிப்பில் ஈடுபடும்

# நிறுவனங்களுக்கு அரசு உதவி செய்ய வேண்டும்

**நாகை, பிப். 11:** இயற்கை உரங்கள் தயாரிப்பில் ஈடுபடும் நிறுவனங்களுக்கு அரசு உதவி செய்ய வேண்டும் என்று எம்எல்ஏ வலியுறுத்தினார்.

நாகை நகராட்சி எக்ஸ்னோரா, பெப்சிகோ சார்பில் பூஜ்ய கழிவு மைய தொடக்க விழா நடைபெற்றது. நகராட்சி தலைவி தங்கப்பிள்ளை தலைமை வகித்தார். நாகை ஆட்சியர் ஜவஹர், நகராட்சி துணைத்தலைவர் மாரிமுத்து, இன்டர்நேஷனல் எக்ஸ்னோரா துணைத் தலைவி மங்கலம் பாலசுப்ரமணியன், நாகை மாவட்ட எக்ஸ்னோரா தலைவர் குப்புசாமி, வேளாங்கண்ணி பேரூராட்சி தலைவர் ஜூலியட் அற்புதராஜ் கலந்து கொண்டனர்.

எம்எல்ஏ மாரிமுத்து பேசுகையில், என்டோ சல்பான் என்ற பூச்சி கொல்லி மருந்தை அமெரிக்கா உள்பட 52 நாடுகள் தடை செய்துள்ளன. இந்தியாவில் பயன்படுத்தி வருகிறோம். இயற்கை விஞ்ஞானி நம்மாழ்வார் போன்றவர்கள், இயற்கை வேளாண்மையை வலியுறுத்தியும் வரவேற்பு குறைவாக உள்ளது. இயற்கை விவசாயத்தின் மூலம் சாட்டியக்குடி கிராமத்தில் திமுக பிரமுகர் சிக்கல் அம்பலவாணன் ஒரு ஏக்கருக்கு 80 மூட்டை நெல் அறுவடை செய்திருக்கிறார். கியூபா நாட்டில் 100 சதவீதம் இயற்கை வேளாண்மை தான் கடை பிடிக்கப்பட்டு வருகிறது. அதனால் தான் கியூபா உலகத்திலேயே கரும்பு உற்பத்தியில் முதலிடத்தில் உள்ளது. எனவே இயற்கை உரங்கள் தயாரிப்பில் ஈடுபடும் எக்ஸ்னோரா உள்ளிட்ட நிறுவனங்களுக்கு அரசு நிதி உதவி செய்ய வேண்டும், என்றார்

டாக்டர் விஜயலட்சுமி பேசுகையில்,

மண்புழு உரம் விவசாயத்துக்கு மட்டுமின்றி பட்டு வளர்ப்பு, மீன் வளர்ப்பு உள்ளிட்ட பல்வேறு விதத்தில் பயன்படுகிறது.

மண்புழு உரம் குறித்து நெல்லையில் உள்ள மகளிர் சுய உதவி குழுவினர் 2 ஆயிரம் பேருக்கு நான் காண்டு பயிற்சி அளிக்கப்பட்டது. அவர்களில் 20 பேர் மாதம் ரூ.10 ஆயிரம் முதல் ரூ.20 ஆயிரம் வரை சம்பாதிக்கிறார்கள். மண்புழு உர பயன்பாட்டை நாடு முழுவதும் பரப்ப வேண்டும். ஒரு டிராக்டரின் பணியை மண்புழு செய்கிறது. ஒவ்வொருவரும் தங்களது கொல்லைபுரத்தில் நாளொன்றுக்கு ஆயிரம் மண்புழு உற்பத்தி செய்து விற்பனை செய்து வாழ்க்கையில் முன்னேற வேண்டும்.

இவ்வாறு விஜயலட்சுமி பேசினார்.

தினகரன்
திருச்சி 11 பிப்ரவரி 2007